

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (20.01.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு170, கோட்டூர்புரம், பள்ளிப்பட்டு பிரதான சாலையில் உள்ள பள்ளிப்பட்டு விளையாட்டுத் திடலில் மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி ரூ.40 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள மகளிர் தனிச்சிறப்பு உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மற்றும் அலுவலர்கள் , கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு:

# பொதுமக்கள் அரசு மருத்துவமனைகளை அதிகளவில் பயன்படுத்தி வருகிறார்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜன.21

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.01.2025) சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்விற்குப்பின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 போன்ற திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்.

அந்தவகையில், இன்றைய தினம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும், புறநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, காய்ச்சல் பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு, இரத்த சுத்திகரிப்பு மையம், குழந்தைகள் நலப் பிரிவு, மகப்பேறு சிகிச்சை பிரிவில் ஆய்வு மேற்கொண்டு அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறியப்பட்டது.

**மருத்துவர்களுக்கு அறிவுரைகள்**

அதேபோன்று, மருந்து, மாத்திரைகள் வழங்குமிடத்தில் 300-க்கும் மேற்பட்ட அவசர கால மருந்து, மாத்திரைகள் இருப்பு வைத்திருப்பது குறித்தும், சலவை செய்யும் இடம், உணவு தயாரிக்கும் கூடம், சிடி ஸ்கேன் எடுக்கும் அறை, படுக்கை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது சிகிச்சைக்கு வந்திருந்த பொதுமக்களிடம் மருத்துவமனையில் வழங்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்ததுடன், தொடர்ந்து மருத்துவமனையினை சிறந்த முறையில் பராமரித்து பணியாற்றிடும் வகையில் மருத்துவர்களுக்குத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 3 ½ ஆண்டுகளில் நுண் கதிர் துறையில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்துடன் கூடிய அதிநவீன PET CT Scan கருவி, இருதய சிகிச்சை துறைக்கு ரூ.6.15 கோடி மதிப்பிலான CATH LAB கருவி பொருத்தப்பட்டு இதுவரை 2,800க்கும் மேற்பட்ட சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மகப்பேறு மருத்துவத் துறைக்கு ரூ.39 இலட்சம் மதிப்பிலான குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அதிநவீன லேப்ராஸ்கோப்பி கருவிகள், ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் அதிநவீன கோபால்ட் கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரம் உட்பட ரூ.68.15 கோடி செலவில் பல்வேறு பணிகள் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**உடல் பரிசோதனை**

மேலும், தற்போது ரூ.92.77 கோடி மதிப்பீட்டிலான முழு உடல் பரிசோதனை பிரிவு, செவிலியர் பள்ளிக்கான ஆசிரியர் மற்றும் செவிலியர் விடுதிகள், லீனியர் ஆக்சிலேட்டர் கருவீ பொருத்தும் பணி, பிரேக்கிதெரபி கருவி பொருத்தும் பணி உள்ளிட்ட பல்வேறு கட்டுமானப் பணிகள் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்று வருகிறது.

அதேபோன்று, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை தவிர்த்து, பிற அரசு மருத்துவமனைகள், நகர்புற நல வாழ்வு மையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களில் இதுவரை ரூ.39.98 கோடி செலவில் பல்வேறு மருத்துவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், தற்போது ரூ.23.55 கோடி செலவில் நகர்ப்புற நல வாழ்வு மையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களும், ரூ.3.63 கோடி செலவில் வாழப்பாடி அரசு மருத்துவமனை ஒருங்கிணைந்த அவசர மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடமும் என மொத்தம் ரூ.27.18 கோடி செலவில் 50 மருத்துவக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

அதேபோன்று, இதர நோய்களுக்கான மருந்து, மாத்திரைகள் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், இதயம் காப்போம் திட்டம், சிறுநீரகம் பாதுகாப்போம், பாதம் பாதுகாப்போம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக,புற்றுநோயினை மிகத் துல்லியமாக கண்டறியும் PETCT Scan கருவி தமிழ்நாட்டில் உள்ள சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனை ஆகிய இரண்டு அரசு மருத்துவமனைகளில் இருந்து வந்த நிலையில், முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கடந்த 3 ½ ஆண்டுகளில் புதிதாக சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் PETCT Scan கருவி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அதேபோன்று, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, பொதுமக்கள் அரசு மருத்துவமனைகளை அதிகளவில் பயன்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகளாக நாள்தோறும் 4,400க்கும் மேற்பட்டோர் மருத்துவச் சேவையைப் பெற்று வருகின்றனர்.

அம்மாப்பேட்டை அரசு புறநகர் மருத்துமனையில் கடந்த மாதம் வரை 6,000க்கும் மேற்பட்டோர் சிகிச்சைப் பெற்றுள்ளனர். நாள்தோறும் 200க்கும் மேற்பட்டோர் இம்மருத்துவமனையினைப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், இம்மருத்துவமனையில் புதியதாக சிறுநீரக சிகிச்சைப் பிரிவு அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இரத்த கொடையாளர்கள் அதிகம்!**

இன்றைய தினம் இம்மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடத்தப்பட்டு இங்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு என்னென்ன வசதிகள் மேற்கொண்டு செய்து கொடுக்க வேண்டும் என்பது குறித்து கேட்டறியப்பட்டது. குறிப்பாக, இரத்த வங்கிப் பிரிவில் தமிழ்நாட்டிலேயே திருச்சி மாவட்டத்திற்கு அடுத்தபடியாக இரத்த கொடையாளர்கள் அதிகளவில் சேலம் மாவட்டத்தில் உள்ளதால் இதற்கென இவ்வளாகத்தில் தனி கட்டடம் அமைத்துத்தர வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர்.

மேலும், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடவும் கோரியுள்ளனர். அதேபோன்று இரத்த பரிசோதனை செய்யும் இடம் மற்றும் அதன் முடிவுகளை பெறும் இடங்களை அருகருகே இருக்குமாறு மாற்றித்தர வேண்டுமென சிகிச்சைபெற வருகைபுரிந்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று விரைவில் 2,553 மருத்துவக் காலி பணியிடங்கள் நிரபப்பபடவுள்ளன. இதற்கான தேர்வுகள் முடிவுற்று விடைத்தாள் திருத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம் இன்று (21-01-2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: ஜனவரி 25 மொழிப்போர் தியாகிகள் நினைவு நாள் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் வருகை.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



இந்துத்துவா அடையாளத்தோடு உள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவப் படத்தை பயன்படுத்தும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயலைக் கண்டித்தும், இந்திய அரசு அங்கீகரித்த அய்யன் திருவள்ளுவர் திருவுருவப் படத்தையே தமிழ்நாடு ஆளுநர் பயன்படுத்த வேண்டுமெனக்கோரியும் தலைநகர் சென்னை மக்கள் இயக்கம் சார்பில் நேற்று (20.01.2025) காலை 10 மணியளவில் வியாசர்பாடி அஞ்சலகத்திலிருந்து அரசு அங்கீகரித்த அய்யன் திருவள்ளுவர் திருவுருவப் படம் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தலைநகர் சென்னை மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் எ.த.இளங்கோ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சென்னை மாநகராட்சியின் 37ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் ஜெ.டில்லிபாபு, ம.தி.மு.க.வின் 35ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் சு.ஜீவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் 45ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் இளஞ்சேகுவேரா உள்ளிட்டோரும், காங்கிரஸ், ம.தி.மு.க., வி.சி.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய குடியரசு கட்சி, ஐக்கிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் நிர்வாகிகள் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–2 க்கு உட்பட்ட திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்ட செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 20-01-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## பணியின் போது உயிரிழந்த –

# மணலி போக்குவரத்து தலைமைக் காவலர் ஜெயகிருஷ்ணன்!

### கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. அஞ்சலி செலுத்தி நிதி உதவி! அரசு மரியாதை!

சென்னை, ஜன.21-

திருவொற்றியூர் மணலி போக்குவரத்து காவல் துறையில் பணியின் போது இறந்த தலைமை காவலர் ஜெயகிருஷ்ணன் உடலுக்கு மாநில மீனவரணி துணை தலைவர் திருவொற்றியூர் கே.பி.சங்கர் அஞ்சலி செலுத்தி நிதி உதவி வழங்கினார்.

திருவொற்றியூர் சக்தி கணபதி நகரை சேர்ந்தவர் ஜெயகிருஷ்ணன் (44). மணலி போக்குவரத்து காவல்துறையில் தலைமை காவலராக பணியாற்றி வந்தார். இவர் நேற்று முன்தினம் மாலை மணலி மார்க்கெட் பகுதியில் பணியில் இருந்த போது திடீரென மயங்கி விழுந்தார். சக போலீசார் அவரை மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஜெயகிருஷ்ணன் இறந்து விட்டதாக கூறினர்.

பின்னர் அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நேற்று அவரது இல்லத்தில் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இதில் ஆவடி மாநகர கமிஷனர் சங்கர், கூடுதல் கமிஷனர் பவானீஸ்வரி, செங்குன்றம் துணை கமிஷனர் பாலகிருஷ்ணன், எண்ணூர் உதவி கமிஷனர் வீரக்குமார், காவல் ஆய்வாளர்கள் சுதாகர், கோதண்டராமன், சோபிதாஸ், உள்ளிட்ட ஏராளமானோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி.சங்கர் அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பிறகு ஜெயகிருஷ்ணனின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறினார்.

பின்னர் ஜெயகிருஷ்ணன் உடல் ஊர்வலமாக திருவொற்றியூர் பட்டினத்தார் மின் மயானம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு உதவி ஆய்வாளர் முரளி கிருஷ்ணன் தலைமையில் 21 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்பட்டது.

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

# மதுரவாயல் 143வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### வட்டக் கழக செயலாளர் சி. சசிகுமார் அறிவிப்பு!

சென்னை, ஜன.21

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 143வது வட்ட கழக செயலாளர் சி. சசிகுமார் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 143வது வட்ட கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (21.01.2025) செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி அளவில் நொளம்பூரில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் வட்டக்கழக அவைத் தலைவர் எஸ். ரகுபதி தலைமையிலும், ஜி.மூர்த்தி, கே.ஆறுமுகம், பி.உமாபதி, பி. தாட்சாயணி, பக்தவச்சலம், டி.நாகரத்தினம், என். மணிவண்ணன் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகச் செயலாளரும், வளசரவாக்கம் மண்டலக்குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

இக்கூட்டத்தில் வருகின்ற 25.1.2025 அன்று நடைபெற உள்ள மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்திற்கு வருகை தரும் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க உள்ளார். இது சம்பந்தமாக ஆலோசிக்கப் பட உள்ளது.

ஆகவே நம்முடைய 143வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்மாறு வட்ட கழக செயலாளர் சி.சசிகுமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் மத்திய ஒன்றியச் செயலாளர் எல்.கிருஷ்ணன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 20.01.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர் நகர் தெற்கு பகுதி, மாவட்ட பிரதிநிதியும், கலைஞர் நகர் பணிமனை முன்னாள் செயலாளர் நந்தகோபால் பணி ஓய்வு பிரிவுபசார விழாவில் மாநில வர்த்தகரணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், பகுதி செயலாளர் கே.கண்ணன் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். உடன் மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன், பகுதி துணை செயலாளர் அஜந்தாரவி, வட்ட செயலாளர்கள் இரா.செழியன், பூக்கடை ஆர்.பழனிச்சாமி, பி.கே.குமார், சோ.செந்தில்குமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஆர். சசிகுமார், மாவட்ட வர்த்தகரணி நிர்வாகிகள் ஆர்.ராமமூர்த்தி, கே.வி.எஸ்.சுரேஷ், மகேந்திரன், போக்குவரத்து தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.